**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 02.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 24/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-1 |
| **சாட்சியின் பெயர்** | : | சூரியா |
| **தந்தை பெயர்** | : | சங்கர் |
| **கிராமம்** | : | மலையூர் |
| **தாலுக்கா** | : | கூத்தாநல்லூர் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 26 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 ,2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சார்ந்தவன். சாட்சிகள் சுமதி, தனபால் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள உடையார் சாதியை

சேர்ந்தவர்கள். கடந்த 16.05.2020 ஆம் தேதி மாலை 4.00 மணி அளவில் 1ம் எதிரி நடராஜன் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு அவர் வீட்டிற்கு வர சொன்னார். அந்த தேதியில் எனது அம்மா சுமதி அத்திசோழமங்கலம் கிராமத்தின் ஊராட்சி மன்ற தலைவராக இருந்து வந்தார். அப்போது தண்ணீர் பைப் லயன் வேலைகள் எல்லாம் நான் எடுத்து பார்த்து வந்தேன். 1ம் எதிரி அழைத்தவுடன் அவர் வீட்டிற்கு சென்றேன். 1ம் எதிரியிடம் எதற்காக வர சொன்னீர்கள் என்று கேட்டேன். அப்போது 1ம் எதிரி உனது தந்தை 3 லட்சம் கடனாக வாங்கி இருந்ததாக சொன்னார். நான் எனது அப்பா இறந்து 3 மாதங்கள் ஆகிவிட்டது எனது தந்தையார் எனக்கு எந்த கடனும் இல்லை எல்லா கடனும் நான் கொடுத்துவிட்டேன் என்றும் என்னிடம் கூறியிருந்தார். நீங்கள் தற்போது கேட்கிறீர்களே என்று எதிரியிடம் கேட்டபோது அவர் நீ தான் அந்த பணத்தை எல்லாம் கொடுக்கனும் பற தேவடியா பயலே பணத்த கொடுக்கலனா உன்ன சும்மா விடமாட்டேன் என்று பேசிவிட்டு பக்கத்தில் கிடந்த கம்பை எடுத்து எனது தலையில் அடித்துவிட்டார். 2ம் எதிரி கங்காதரன் எனது கன்னத்தில் அறைந்து பற பயலே என்று பேசிவிட்டு கையால் எனது மூக்கில் குத்தினார். நான் அடி தாங்க முடியாமல் சத்தம் போட்டேன். அப்போது தனபால், அவரது மகன் துர்கேந்திரன், மல்லிகா ஆகியோர் என்னை காப்பாற்றி வெளியே அழைத்து வந்தார்கள். என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று எதிரிகள் இருவரும் என்னை பார்த்து பேசினார்கள். அடி தாங்க முடியாமல் இருந்த நிலையில் எனது அண்ணன் சதீஷ் என்பவர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவமனையில் சேர்த்தார். நான் சிகிச்சையில் இருந்தபோது கொரடாச்சேரி போலீசார் நடந்த விவரம் கேட்டார்கள் நடந்த விவரம் சொன்னேன். நான் சொன்னதை எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். இந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்

பின்னர் திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள் நான் நடந்த விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.02 16:08:47 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.